# 20 ஜூலை 2023 தினசரி நடப்பு நிகழ்வுகள்

## செய்திகளில் இடம் பெற்ற நபர்கள்

### 4 உயர்நீதிமன்றங்களுக்கு புதிய தலைமை நீதிபதிகள் நியமனம்



- குஜராத், ஒடிசா உள்ளிட்ட 4 உயர்நீதிமன்றங்களுக்கு புதிய தலைமை நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர்.
- அலாகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி "சுனிதா அகர்வால்", குஜராத் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்கப்படுகிறார்.
- ஒடிசா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி செப்டம்பர் 8–ஆம் தேதி ஓய்வு பெறும் நிலையில், அதே நீதிமன்றத்தைச் சேர்ந்த நீதிபதி "சுபாசிஷ் தலபத்ரா" தலைமை நீதிபதியாக பொறுப்பேற்பார்.
- குஜராத் உயர்நீதிமன்ற நீதிபதி "ஆசிஷ் ஜெ.தே சாய்", கேரள உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாகவும் கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி "அலோக் அராதே", தெலங்கானா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாகவும் நியமிக்கப்படுகின்றனர்.

### பிரிட்டன் சர்வதேச மாணவர் விருது, இறுதிப் போட்டியாளர்களில் 5 இந்தியர்கள்




- பிரிட்டனின் "சர்வதேச மாணவர் விருதுக்கான" 50 இறுதிப் போட்டியாளர்களில், தமிழக மாணவி (வினிஷா உமாசங்கர்) உள்பட 5 இந்திய மாணவர்கள் இடம்பிடித்து அசத்தியுள்ளனர்.
- உலக அளவில் கற்றல் மூலமாக சமூகத்துக்கு பயனுள்ள கண்டுபிடிப்பை உருவாக்கியுள்ள தலைசிறந்த மாணவர் ஒருவரை தேர்வு செய்து ரூ. 82 லட்சம் பரிசுத் தொகையுடன் கூடிய இந்த விருதை பிரிட்டனைச் சேர்ந்த 'செக்.ஓ ஆர்ஜி அமைப்பு ஒவ்வொரு ஆண்டும் வழங்கி வருகிறது.
- நிகழாண்டுக்கான விருதுக்கு 122 நாடுகளைச் சேர்ந்த 3,851 மாணவர்கள் விண்ணப்பித்த நிலையில், 50 பேர் இறுதிப் போட்டியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
- தேர்வு செய்யப்பட்டுள்ள 50 பேரிலிருந்து 10 இறுதிப் போட்டியாளர்கள் அடுத்த மாதம் தெரிவு செய்யப்படுவர்.
- இந்த 10 பேரிலிருந்து இறுதி வெற்றியாளர் ஆண்டின் இறுதியில் அறிவிக்கப்படுவார்.

## எல்ஜசி–க்கு புதிய நிர்வாக இயக்குநர்

- இந்தியாவின் மிகப் பெரிய ஆயுள் காப்பீட்டு நிறுவனமான எல்ஜசி–யின் புதிய நிர்வாக இயக்குநராக "சத்பால் பானு" நியமிக்கப்பட்டுள்ளார்.
- இதுவரை அந்தப் பொறுப்பை வகித்து வந்த சித்தார்த்த மொஹந்தி, நிறுவனத்தின் தலைவராக கடந்த ஏப்ரல் மாதம் நியமிக்கப்பட்டார்.
- அதனைத் தொடர்ந்து, தற்போது அந்தப் பதவிக்கு சத்பால் பானு நியமிக்கப்பட்டுள்ளார்.

## டெஸ்ட் கிரிக்கெட்டில் 600 விக்கெட் வீழ்த்தி இங்கிலாந்து பவுலர் "ஸ்டுவர்ட் பிராட்" சாதனை



- ஆஸ்திரேலியா– இங்கிலாந்து அணிகள் இடையிலான ஆஷஸ் தொடரின் 4–வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மான்செஸ்டரில் உள்ள ஓல்டு டிராப்போர்டில் நேற்று தொடங்கியது.
- இங்கிலாந்து தரப்பில் வேகப்பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் பிராட் 2 விக்கெட்டும் வீழ்த்தினார்.
- இதையும் சேர்த்து டெஸ்ட் கிரிக்கெட்டில் அவரது விக்கெட்எண்ணிக்கை 600–ஆக (166 டெஸ்ட்) உயர்ந்தது.
- 146 ஆண்டு கால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 600 விக்கெட் மைல் கல்லை எட்டிய 5–வது பவுலர் என்ற சிறப்பை பெற்றார் "ஸ்டுவர்ட் பிராட்".
- முதல் 4 இடங்களில் இலங்கையின் முரளிதரன் (800 விக்கெட்), ஆஸ்திரேலியாவின் ஷேன் வார்னே (708), இங்கிலாந்தின் ஜேம்ஸ் ஆண்டர்சன் (688), இந்தியாவின் அனில் கும் பிளே (619) ஆகியோர் உள்ளனர்

## இந்திய கடலோர காவல்படையின் (ஐசிஜி) 25வது டைரக்டர் ஜெனரலாக "ராகேஷ் பால்" நியமிக்கப்பட்டுள்ளார்.



- அவர் 1989 இல் இந்திய கடலோர காவல்படையில் சேர்ந்தார் மற்றும் இந்திய கடற்படை அகாடமியின் முன்னாள் மாணவர் ஆவார்.
- 34 வருட வாழ்க்கையில், கடலோர காவல்படை மண்டலத்தின் (வடமேற்கு), கூடுதல் இயக்குநர் ஜெனரல் கடலோர காவல்படை போன்ற பல பதவிகளை வகித்தார்.
- பிப்ரவரி 2023 இல் அவருக்கு கடலோர காவல்படையின் இயக்குநர் ஜெனரல் கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டது.
- அவர் 2013 இல் தத்ரக்ஷக் பதக்கமும், 2018 இல் ஜனாதிபதி தத்ரக்ஷக் பதக்கமும் பெற்றார்.

**இந்திய கடலோர காவல்படை**

- இது பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- இது ஒரு ஆயுதப்படை, கடல்சார், தேடல் மற்றும் மீட்பு மற்றும் சட்ட அமலாக்க நிறுவனம்.
- தலைமையகம் – புது தில்லி.

## செய்திகளில் இடம் பெற்ற இடங்கள்

### குஜராத்தின் 'வைர நகரில்' ஒரு புதிய மகுடம்



- உலகிலேயே மிகப்பெரிய அலுவலக கட்டிடமாக,
- அமெரிக்க ராணுவத்தின் தலைமையகமான 'பென்டகன்' திகழ்ந்தது.
- தற்போது அதை இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் கட்டப்பட்டுள்ள "வைர வர்த்தக மைய கட்டிடம்" தாண்டியுள்ளது. இப்போது இதுதான் உலகின் மிகப் பிரமாண்ட அலுவலக கட்டிடம்.
- இந்தியாவின் வைரத்தொழில் தலைநகரமாக குஜராத்தின் சூரத் நகரம் திகழ்கிறது. உலகின் 90 சதவீத வைரங்கள் இங்கு பட்டை தீட்டப்படுவதாகவும் கூறப்படுகிறது.
- இவர்கள் அனைவரும் ஒரே இடத்தில் ஒருங்கிணைந்து செயல்படும் விதத்தில் 'சூரத் வைர பங்குச்சந்தை' என்ற மகா பெரிய அலுவலகம் கட்டப்பட்டுள்ளது.இந்த திட்டத்தின் தலைமை செயல் அதிகாரி "மகேஷ் காதவி".

## கலை மற்றும் கலாச்சாரம்

### ருத்ரகிரி மலை சுவரோவியம்:

- ஆந்திரப் பிரதேசத்தின் குண்டூர் மாவட்டத்தில் ருத்ரகிரி மலை அமைந்துள்ளது.
- கி.பி 1300 காகதீய கால சுவரோவியம் வரலாற்றுக்கு முற்பட்ட இடைக்கற்காலக் கலைப்படைப்பில் மிகைப்படுத்தப்பட்டதாகக் கண்டறியப்பட்டது.
- ராமாயணத்தை சித்தரிக்கும் காகதீய வம்சத்திலிருந்து ஒரு சிறந்த படைப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

## பாதுகாப்பு

### "நாடோடி யானை–2023",




- இந்தியா–மங்கோலியா இருதரப்பு கூட்டு ராணுவப் பயிற்சியின் 15வது பதிப்பான "நாடோடி யானை–2023", 2023 ஜூலை 17 முதல் 31 வரை மங்கோலியாவின் உலான்பாதரில் நடத்தப்படுகிறது.

- 43 வீரர்கள் அடங்கிய இந்திய ராணுவம் மங்கோலியாவில் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது.
- முதன்மை தீம்: ஐக்கிய நாடுகளின் (UN) ஆணையின் கீழ் மலைப்பகுதிகளில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்துங்கள்.
- குறிக்கோள்: நேர்மறையான இராணுவ உறவுகளை உருவாக்குதல், சிறந்த நடைமுறைகளை பரிமாறிக்கொள்வது, இயங்குதன்மை, இரு நாட்டுப் படைகளுக்கு இடையே நட்புறவை வளர்ப்பது.

## புத்தகங்கள் மற்றும் ஆசிரியர்கள்:

- பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் சுகாதார அமைச்சர் மன்சுக் மாண்டவியா ஆகியோர் எஃப்.எஸ்.எஸ்.ஏ.ஐ உருவாக்கிய 'Healthy Recipes for Defence' என்ற புத்தகத்தையும் வெளியிட்டனர்.
- ஸ்ரீ அண்ணா என்றும் அழைக்கப்படும் சிறுதானியங்களின் நுகர்வை ஊக்குவிப்பதும், அவற்றின் எண்ணற்ற ஆரோக்கிய நன்மைகளை முன்னிலைப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

## இந்திய அரசியல் கட்சிகளும் அரசியல் அமைப்பும்:

### டிஜிட்டல் டைம் வவுச்சர்கள்

- தேர்தலின் போது தூர்தர்ஷன் மற்றும் அகில இந்திய வானொலியில் பிரச்சாரம் செய்வதற்காக தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுக்கு டிஜிட்டல் நேர வவுச்சர்களை வழங்க இந்திய தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.
- தகவல் தொழில்நுட்ப (ஐடி) தளத்தின் மூலம் டிஜிட்டல் டைம் வவுச்சர்களை வழங்குவதற்கான விதியை அறிமுகப்படுத்துவதன் மூலம் இது செய்யப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு தரப்பினருக்கும் தூர்தர்ஷனில் ஒளிபரப்பு செய்வதற்கும், ஏ.ஐ.ஆரில் ஒளிபரப்பு செய்வதற்கும் ஒதுக்கப்பட்ட மொத்த நேரத்திற்கு சமமாக, 5 நிமிடங்கள் மற்றும் 10 நிமிடங்களின் வெவ்வேறு பிரிவுகளின் நேர வவுச்சர்கள் வழங்கப்படும்.
- 1998ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் தேதி அறிவிக்கப்பட்ட இத்திட்டம், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 பிரிவு 39ஏ–வின் கீழ் சட்டரீதியான அடிப்படையைக் கொண்டுள்ளது.

## திட்டங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடு

### க்ருஹ லக்ஷ்மி திட்டம்

- க்ருஹ லக்ஷ்மிக்கான பதிவு 19 ஜூலை 2023 அன்று தொடங்குகிறது, இது ஒரு குடும்பத்தின் பெண் தலைவர்களுக்கு நிதி உதவி வழங்குவதற்காக கர்நாடக அரசால் தொடங்கப்பட்ட பயனுள்ள திட்டமாகும்.




- க்ருஹ லக்ஷ்மி திட்டம் என்பது ஒரு குடும்பத் தலைவிக்கு மாதம் ரூ.2000 நிதி உதவி வழங்கத் தொடங்கப்பட்ட ஒரு பயனுள்ள திட்டமாகும்.
- ஆகஸ்ட் 15–20 முதல் இந்தத் திட்டத்தின் கீழ் பயனாளிகள் தொகையைப் பெறுவார்கள்
- இத்திட்டத்தின் மூலம் 1,11,00,000 பெண்கள் பயனடைவார்கள் மற்றும் அரசு ஒதுக்கியுள்ள தொகை ரூ.18,000 கோடி ஆகும்.
- இத்திட்டத்தின் மூலம் மாநிலத்தில் உள்ள 12.8 மில்லியன் குடும்பங்கள் பயன்பெறும்.

## அறிவியல் & தொழில்நுட்பம்

### 'டிடிஎஸ் நண்பன்' சாட்பாட் செயலி அறிமுகம்

- வருமான வரித் துறையின் வர லாற்றில் முதல் முயற்சியாக 'டிடிஎஸ் நண்பன்' (TDS Nanban) என்ற பெயரில், பல்வேறு விதிகள்,
- கட்டணங்கள், பணம் அனுப்புவதற்கான காலக்கெடு, அறிக்கைகளைத் தாக்கல் செய்வதற்கான காலக் கெடு, தண்டனை விதிகள் போன்ற டிடிஎஸ் (TDS) தொடர்பான பிரத்யேகமான கேள்விகளுக்குப் பதில்களை வழங்கும் வகையில் செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் 'சாட்பாட்' (Chatbot) செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இது வரி செலுத்துவோர் மற்றும் வருமான வரித்துறை ஆகியவற்றுக்கு இடையே வாரத்தின் 7 நாட்களும்,24 மணி நேரமும் செயல்படும்.

## வங்கி & நிதி

ஃபோன்பேயின் – இந்தியாவின் முதல் சுகாதார காப்பீட்டு தளம்




- ஃபோன்பே மாதாந்திர சந்தாக்களுடன், இந்தியாவின் முதல் சுகாதார காப்பீட்டு தளத்தை அறிமுகப்படுத்துகிறது
- ஃபோன்பே இன்சூரன்ஸ் ப்ரோக்கிங் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (PIBS), ஃபோன்பே பிரைவேட் லிமிடெட்டின் முழுச் சொந்தமான துணை நிறுவனமானது, முன்னணி காப்பீட்டு நிறுவனங்களுடன் இணைந்து விரிவான காப்பீட்டை வழங்கும் ஹெல்த் இன்சூரன்ஸ் திட்டங்களை அறிமுகப்படுத்தியது.
- இந்த ஹெல்த் இன்சூரன்ஸ் திட்டங்கள் ரூ.1 கோடி வரை கவரேஜுடன் வருகின்றன.

# தேசிய நடப்பு நிகழ்வுகள்

## நாட்டின் முதல் 'செயற்கைக்கோள் நெட்வொர்க் போர்டல் தளத்தை'குஜராத்தில் துவக்கப்படவுள்ளது.

டிஜிட்டல் இந்தியாவின் கீழ் இந்த திட்டம், நாடு முழுவதும் உள்ள கிராமங்கள், மாவட்ட பஞ்சாயத்துகள், உள்ளூர் நிர்வாக அமைப்புகள், அரசு துறைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு மலிவு, பாதுகாப்பான மற்றும் அதிவேக இணையம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மத்தியப் பிரதேசத்தில் உள்ள இந்தூரில் இந்தியாவின் G20 பிரசிடென்சியின் கீழ் 4வது வேலைவாய்ப்பு பணிக்குழு (EWG) கூட்டம்

மத்தியப் பிரதேசத்தில் உள்ள இந்தூரில் இந்தியாவின் G20 பிரசிடென்சியின் கீழ் 4வது வேலைவாய்ப்பு பணிக்குழு (EWG) கூட்டத்தில், அமைப்புசாரா தொழிலாளர்களின் உலகின் மிகப்பெரிய தரவுத்தளமான இ–ஷ்ரம் மற்றும் தேசிய தொழில் சேவை (NCS) போர்டல் பற்றிய விளக்கக்காட்சியை இந்தியா வழங்கியது.

## நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத்தொடர் ஜூலை 20ஆம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 11,2023 அன்று முடிவடையும்.

மழைக்கால அமர்வு

- பாராளுமன்றத்தை கூட்டுவது அரசியலமைப்பின் சரத்து 85ல் குறிப்பிடப்பட்டுள்ளது.
- நாடாளுமன்றக் கூட்டத்தைக் கூட்டும் அதிகாரம் அரசாங்கத்திடம் உள்ளது.
- நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவால் முடிவு எடுக்கப்படுகிறது.
- இந்தியாவில் நிலையான பாராளுமன்ற காலண்டர் இல்லை.

# தமிழ்நாட்டு நடப்பு நிகழ்வுகள்

## மகளிர் உரிமை தொகை திட்டம்

தமிழக அரசு, இந்த ஆண்டு, மறைந்த முதல்வர் சி.என்., அண்ணாதுரை பிறந்த நாளான, செப்டம்பர், 15ல், தகுதியுள்ள, குடும்பத் தலைவர்களுக்கு, மாதம், 1,000 ரூபாய் நிதியுதவி வழங்கும், மகளிர் உரிமை தொகை திட்டத்தை துவக்குகிறது.